# மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு

**பிரகாஷ் கே. ராமதாஸ் / Prakashdas K. Ramadas***
மலாய் மொழி ஆய்வு மையம் / Academy of Malay Studies
மலாயாப் பல்கலைக்கழகம் / University of Malaya
prakashdasvasi@gmail.com
**&**
**இரா. சீதா லச்சுமி / R. Seeta Lechumi**
இந்திய ஆய்வியல் துறை / Department of Indian Studies
மலாயாப் பல்கலைக்கழகம் / University of Malaya
rseeta@um.edu.my

Manuscript received 31 March 2021
Manuscript accepted 15 June 2021
*Corresponding author / First Author

## ABSTRACT
*Piper betel* Linn (betel vine; family Piperaceae) *is also known as 'Vettriliai' in Tamil is one of the most important plant in Asia.* As the leaves, roots and stems are all used for medicinal purposes, *it is also an important medical agent* in the various traditional and folk systems of medicine in Southeast Asia countries. This paper discussed about the uses of Piper betel Linn among Indians in Malaysia. Indians brought their culture of using the Piper-Betel to Malaysia. It has been found that the heart-shaped leave of Piper betel Linn is used in Indians wedding functions, prayers and also as medicine. This research has found that Indians in Malaysia using the Piper-Betel in their daily life widely. Piper-Betel is being used as medicine for everyone.

**Key Words:** Leaf use, Malaysian Indians, history of Betel Leaf

## ஆய்வுச்சுருக்கம்
'பைப்ரேஸியே' குடும்பத்தைச் சேர்ந்த வெற்றிலை ஆங்கிலத்தில் *Piper betel Linn* என்று அழைக்கப்படுகிறது. ஆசியாவின் மிக முக்கியமான தாவரங்களில் இதுவும் ஒன்று. இதன் இலைகள், வேர்கள், காம்புகள் என அனைத்தும் மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதால், தென்கிழக்கு ஆசியா நாடுகளில் உள்ள பல்வேறு பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற மருத்துவ முறைகளில் இஃது ஒரு முக்கியமான மருத்துவப் பொருளாகக் கருதப்படுகிறது. இந்த ஆய்வுக் கட்டுரை மலேசிய இந்தியர்களிடையே வெற்றிலையின் பயன்பாட்டைப் பற்றி விளக்குகிறது. மலாயாவுக்கு வந்த இந்தியர்கள் தங்கள் பண்பாட்டில் கலந்த இந்த வெற்றிலையின் பயன்பாட்டையும் இங்கு வேறூன்ற செய்தனர். இதய வடிவிலான இந்த இலை திருமண விழாக்கள், இறைவழிபாடு மற்றும் மருந்தாக இன்றளவும் மலேசிய இந்தியர்களால் பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் வெற்றிலை மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

**கருச்சொற்கள்** :- வெற்றிலையின் பயன்பாடு, மலேசிய இந்தியர்கள், வெற்றிலையின் வரலாறு

## 1.0 முன்னுரை
வெற்றிலையை, 'வெற்று + இலை' எனப் பகுப்பத இலக்கண முறையில் பிரித்துப் பொருள் காணலாம். மிளகு இலையிலுள்ள காரத்தன்மை நீங்கலாக ஏனைய பண்புகள் வெற்றிலையில் உள்ளன . எனவேதான், காரம் இல்லாத (வெற்று) இலை என்னும் கருத்தில் வெற்றிலை எனும் பெயர் பிறந்தது. மேலும், வெற்றிலை சமையலுக்கு உதவாத இலை என்பதாலும் வெற்றிலை என்று அழைத்தனர்

(சந்திரமூர்த்தி, 1977). வெற்றிலையை ஆங்கில மொழியில் 'பைப்பேர் பெட்லே' *(Piper- Betle)*, 'சவிகா-பீடல்' *(Chavica-Betel)* என்று குறிப்பிடுவர். தாவரவியல் நூல்களில் வெற்றிலையின் குடும்பத்தை 'பைப்ரேஸியே' என்று குறிப்பிடுகின்றன (SC Ahuja, 2011).

வெற்றிலை இதயத்தை ஒத்த வடிவில் இருக்கும். இதன் இலை மூன்று முதல் ஒன்பது அங்குல நீளம் உடையது. வெற்றிலைக் காம்புகள் அரை முதல் இரண்டு அங்குல நீளம் கொண்டவை. வெற்றிலை கொடியாகப் படர்ந்து வளரும் தாவர வகையாகும். வெற்றிலைக்கொடி ஏறத்தாழ 15 மீட்டர் உயரம் வரை ஓங்கி வளரும் (SC Ahuja, 2011). வெற்றிலைக்கொடிக்குத் தாம்பூலி, தாம்பூல வலி, நாகவலி, மூலவல்லி இலைக்கொடி என்று பல பெயர்கள் உள்ளன. வெற்றிலையில் ஆண், பெண் என்று இரண்டு வகை இலைகள் உள்ளன. ஆண் வகை வெற்றிலை நீளமாகவும்; பெண் வகை வெற்றிலை அகலமாகவும் இருக்கும்.

வெற்றிலையை மரக்கொடி, கல்லாஸ்கொடி, கம்மாறு வெற்றிலை, சித்துக்கொடி, ஜல்லிக்காம்பு, கற்பூர வெற்றிலை என்று பலவாறாக வகைப்படுத்திக் கூறுவர். பொதுவாக, வெற்றிலை மிகுந்த மணத்துடன் சிறிது காரத்துடன் ஓரளவு வெளிர் நிறத்தில் இருக்கும். கம்மாறு வெற்றிலை கறுப்பு நிறத்திலும் அதிக காரமாகவும் இருக்கும்; கற்பூர வாசனையுடன் சிறிது காரமாக இருப்பது கற்பூர வெற்றிலை ஆகும் (சுவாதி, 2013). மலேசிய இந்தியர்கள் மட்டுமின்றி மலேசியாவில் பெரும்பான்மையினரான மலாய்ச்சமூகத்தினர் மத்தியிலும் வெற்றிலையின் பயன்பாடு காணப்படுகின்றது.

மலேசிய இந்தியர்கள் வெற்றிலையை மங்கலச் சின்னமாகக் கருதுகின்றனர் (அலமேலுமங்கை, 2015). முப்பெருத்தேவியர்களில் செல்வத்திற்குரிய தெய்வமான மகாலட்சுமி வாசம் செய்யும் மங்கலப் பொருள்களுள் வெற்றிலையும் ஒன்று என இந்து சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆகவே, மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலையின் பயன்பாடு அதிகம் காணப்படுவது உறுதியாகின்றது.

**ஆய்வின் பின்புலம்**

மலேசிய இந்தியர்கள் வெற்றிலையைத் தமிழ் இலக்கண இடைப்போலி அடிப்படையில் 'வெத்திலை' என்று வழக்கு மொழியில் குறிப்பிடுவர். அதாவது, வெற்றிலை எனும் சொல்லிலுள்ள 'ற்' மற்றும் 'றி' ஆகிய இரு எழுத்துகளும் 'த்' மற்றும் 'தி' ஆக மாறி ஒலிப்பதால் இடைப்போலி எனப்படுகிறது. தமிழ் அகராதிகள் வெற்றிலைக்குத் தாம்பூலம், திரையல், நாகவல்லி, மெல்லிரை, மெல்லிலை என்று பல பெயர்களைத் தருகின்றன (சந்திரமூர்த்தி, 1977).

பண்டைய காலந்தொட்டே வெற்றிலையின் பயன்பாடு தமிழர் வாழ்வியலில் வேரூன்றியுள்ளது என்பது தமிழ் இலக்கியக் குறிப்புகளின்வழி நன்கு அறிய முடிகிறது. சான்றாக, ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள,

'அம்மன் திரையலோ டடைக்கா யீத்த' (சிலப்பதிகாரம், 16, 55),
'பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து' (மணிமேகலை, 28, 243),

என்ற வரிகளின்வழி நன்கு அறிய முடிகிறது. ஆறாம் நூற்றாண்டுக்கு முன், வெற்றிலையை அடகு, சாகம், அடை, பன்னம், பாக்கிலை, பாசிலை, தாம்பூலம், திரை, திரையல் என்று பல பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ் இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் (சந்திரமூர்த்தி, 1977). ஆதலால், வெற்றிலை என்ற சொல் தெரிநிலையாகத் தமிழ் இலக்கிய நூல்களில் காணப்படவில்லை மாறாக வேறு பெயர்களில் அறியப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உறையூர், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இரும்பாலான பாக்குவெட்டிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இப்பாக்குவெட்டிகள் கி.பி.10 - கி.பி.14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாக்குவெட்டி என்பது பாக்கை வெட்டுவதற்குப் பயன்படும் கருவியாகும். துவர்ப்புச்சுவையுடைய பாக்கை வெறுமனே வாயில் போட்டு மென்றால் இரத்த சோகை நோய் ஏற்படும். ஆகவே, பாக்குடன் வெற்றிலையையும் சேர்த்து மெல்லும் வழக்கம் கி.பி.10ஆம் நூற்றாண்டிலேயே இருந்திருக்கின்றது என்பது ஆய்வாளர்களின் கூற்று (சந்திரமூர்த்தி, 1977).

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து மெல்லுவதைத் தாம்பூலம் தரித்தல் என்று கூறுவர். தாம்பூலம் தரிப்பதற்கு முன் வெற்றிலையை வெறுமனே மெல்லுவது மிக்க நன்று.

தாம்பூலத்தைத் தரிக்கும்போது முதன்முதலில் ஊறும் உமிழ்நீர் நஞ்சு தன்மையுடையது என்பதால் அந்த உமிழ்நீரைக் காரி உமிழ்ந்துவிடல் வேண்டும். இரண்டாவதாக ஊறும் உமிழ்நீர் புத்தி மந்தத்தை ஏற்படுத்தும் என்பதால் அதனையும் காரி உமிழ்ந்துவிடல் வேண்டும். இதனைத் தொடர்ந்து, மூன்றாவதாக ஊறும் உமிழ்நீர் அமிர்தத்தன்மை கொண்டது. ஆகவே, மூன்றாவதாக ஊறும் உமிழ்நீரை விழுங்கிவிடல் வேண்டும். நான்காவதாக ஊறும் உமிழ்நீர் இனிப்பானதாய் இருக்கும். இவ்வாறு தாம்பூலம் தரிப்பதால் உண்டாகும் உமிழ்நீரின் தன்மை குறித்து நம் தமிழர்கள் மிக நுட்பமாக ஆராய்ந்து அறிந்துள்ளனர் (சுவாதி, 2015).

தாம்பூலம் தரிப்பதால் உடலிலுள்ள கிருமிகள் நீங்குவதோடு நெஞ்சில் சூழ்ந்துள்ள சளி, தொண்டைக்கட்டுப் போன்றவையும் நீங்கும். மேலும், நாவறட்சி, தாகம் தீரும்; பசி உண்டாக்கும்; நாவின் தன்மையை மேம்படுத்திச் சுவையுணர்ச்சியைச் சீர்படுத்தும்; மலச்சிக்கல் நீங்கி வயிறு, குடல் முதலான பகுதிகள் தூய்மையாகும். ஏழு உடற்கட்டுகளும் வலிமையடையும். இத்தகைய சிறப்பு வாய்ந்த வெற்றிலையை மலேசிய இந்தியர்கள் தங்கள் வாழ்வியலில் எவ்வகையில் பயன்படுத்தி வருகின்றனர் என்பதனை ஆய்ந்தறியும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**ஆய்வுச் சிக்கல்**

மலேசியவாழ் இந்தியர்களின் மூதாதையர்கள் இரு காரணங்களுக்காகத் தங்கள் பிறந்த நாட்டிலிருந்து மலாயாவிற்குப் புலம் பெயர்ந்து வந்தவர்கள். முதல் வகையினர் 14ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டு வரை தங்களின் சுய முயற்சியில் வணிகம் செய்வதற்காக மலாயா வந்தவர்கள். இரண்டாம் வகையினர் ஆங்கிலேயர்களின் காலணித்துவ ஆட்சியின்போது ஒப்பந்தத் தொழிலாளிகளாகவும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின்கீழ் இயங்கும் அரசாங்கப் பணிகளில் வேலை செய்வதற்காகவும் மலாயா வந்தவர்கள் (ஜெக்சன், 2014). இவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் உடன் கொண்டு வந்தனர். தங்களின் எதிர்காலச் சந்ததியினர் தங்களின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் மறவாமல் தொடர வேண்டுமென்பதற்காகத் தோட்டப்புறங்களில் ஆலயங்களையும் தமிழ்ப்பள்ளிகளையும் நிர்மாணித்தனர். இதன்வழி, வளரும் தலைமுறையினருக்குப் பண்பாட்டுக் கூறுகளையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்தனர். இவற்றில், வெற்றிலை குறித்த வாழ்வியல் வழக்கமும் ஒன்றாகும்.

மலாக்கா செட்டிகள் 14ஆம் நூற்றாண்டில், தமிழ்நாட்டிலுள்ள பண்ணை எனும் கலிங்கப் பட்டணத்திலிருந்து மலாக்கா துறைமுகத்திற்குப் பொருள் ஈட்டுவதற்காக வந்த இந்திய வணிகர்கள் ஆவர். இவர்கள் மலாயா நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து தங்களுக்கென நிரந்தரக் குடிகளை அமைத்துக் கொண்டனர். இவர்களால் உருவான புதிய சந்ததிதான் மலாக்கா செட்டிகள் (முத்துகிருஷ்ணன், 2017). மலாக்கா செட்டிகளின் புறத்தோற்றம் மலாய் சமூகத்தினரைப் போன்று இருந்தாலும் இவர்களின் வாழ்வியல் பழக்கவழக்கங்கள் இந்தியர்களை ஒத்திருப்பது அறியதக்கது.

வெற்றிலை, பாக்கு மெல்லும் பழக்கத்தை மலாக்கா செட்டிகளும் பின்பற்றினர். அக்காலத்தில் இவர்கள் தங்கள் இல்லங்களுக்கு வந்த விருந்தினர்களை உபசரிக்கும் விதமாக வெற்றிலைப்பாக்கு வழங்கினர். மேலும், இவர்களின் வெற்றிலைப்பாக்குப் பெட்டிகள் மிகுந்த கலை வேலைப்பாடு நிறைந்தவையாக இருந்துள்ளன. விருந்தினரை வெகுவாகக் கவரக்கூடிய இந்த வெற்றிலைப் பெட்டி, உபசரிப்பவர்களின் செல்வம் மற்றும் செல்வாக்கைப் புலப்படுத்தக்கூடியதாகவும் விளங்கியது. இல்லங்களுக்கு வருகின்ற விருந்தினர்கள் வெற்றிலைப்பாக்கை எடுத்துக் கொண்டால் உபசரிப்பவர்களின் உபசரிப்பை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் கொண்டனர். ஒரு வேளை, விருந்தினர்கள் வெற்றிலைப்பாக்கை நிராகரித்தால் எதிர்மறையான கருத்தைக் கூற வந்ததாகப் பொருள் கொண்டனர் (சாலி, 2010).

19ஆம் நூற்றாண்டில் காரைக்குடி, திருச்சி, இராமநாதபுரம் போன்ற நகரங்களிலிருந்து லேவாதேவி தொழில் செய்வதற்காக நகரத்தார்கள் என்ற ஒரு புதிய இந்தியச் சமூகத்தினர்

ஈப்போவிற்கு வந்தனர். இவர்கள் நகரத்தார்கள் அல்லது செட்டியர்கள் என்று அழைக்கப்பட்டனர். மலாயாவிலிருந்த மலாய் மற்றும் சீன சமூகத்தினர் வட்டித்தொழில் செய்த நகரத்தார்களைச் செட்டியார்கள் என்று அழைத்தனர் (முத்துகிருஷ்ணன், 2017). நகரத்தார் செட்டிகள் உள்நாட்டு வங்கிகளுக்குப் பணவுதவி செய்கின்ற அளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 1940ஆம் ஆண்டுகளில் எம்.எஸ். மெய்யப்பச் செட்டியார்கள் ஈப்போவில் 'எம்.எஸ்.எம்.எம்' எனும் பெயரில் ஒரு வங்கியை நிர்வகித்து வந்தனர் என்ற வரலாற்றுச் சான்றுகள் உள்ளன (Correspondent, 1940).

தென்னிந்திய தமிழர்களைப் போன்று நகரத்தார்களின் திருமண விழாவிலும் வெற்றிலையின் பயன்பாடு அதிகம் காணப்படுகின்றது. நகரத்தார்களின் திருமணச் சடங்குகளில் மணமகள் வீட்டார் மணமகன் வீட்டாருக்குச் செல்லும்போது ஒரு வெற்றிலை கவுளி எடுத்துச் செல்வது வழக்கம். தொடர்ந்து, திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குச் செல்லும் மணமகள், 'பெண் சொல்லிக் கொள்ளுதல்' சடங்கு முறைப்படி தன் பெற்றோரிடமும் உறவினரிடமும் வெற்றிலைப்பாக்குக் கொடுத்துக் காலில் விழுந்து வணங்குவாள் (பிச்சம்மாள், 1900). இந்த வழக்கம் தமிழகம் மட்டுமின்றி மலேசியாவில் வாழ்கின்ற நகரத்தார்கள் மத்தியிலும் நிலவி வருகின்றது.

1870இல் ஆங்கிலக் காலணித்துவ ஆட்சியின்போது அதிகமான தென்னிந்தியர்கள் கங்காணிகள் மூலம் ஒப்பந்தத் தொழிலாளிகளாக மலாயாவிற்கு அழைத்து வரப்பட்டனர். ரப்பர் தோட்டத்தில் பணி புரிவதற்கும் நகர வளர்ச்சிக்கான கட்டமைப்புப்பணிகளில் வேலை செய்வதற்காகவும், இரயில் பாதை அமைத்தல், கட்டுமானப்பணிகள் போன்றவற்றிக்காகத் தென்னிந்தியர்கள் ஒப்பந்தத் தொழிலாளிகளாக மலாயா வந்தனர். இவ்வாறு ஒப்பந்தத் தொழிலாளிகளாக மலாயா வந்தவர்கள் பெரும்பாலோர் நாகப்பட்டினம், தென்னாற்காடு, வட ஆற்காடு, தஞ்சை, புதுச்சேரி, செங்கல்பட்டு, சேலம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் (விஜயகுமார், 2015).

தென்னிந்திய தமிழர்கள் மலாயா வந்தபோது தங்களுடன் வெற்றிலைப்பெட்டி அல்லது வெற்றிலைச் செல்லத்தைக் (Betel container) கொண்டு வந்தனர். இது தமிழகத்தில் தாம்பூலம் தரிக்கும் வழக்கம் கொண்டவர்கள் வைத்திருக்கும் பெட்டியாகும். இந்த வெற்றிலைப்பெட்டியானது தகரம், பித்தளை, வெள்ளி, பனையோலை ஆகியவற்றால் செய்யப்பட்டதாகும். இந்த வெற்றிலைப்பெட்டிக்குள் பாக்குகளையும் சுண்ணாம்புக் கூட்டையும் வைப்பதற்கென்று தனித் தனியே சிறிய அறைகளுடன் அந்த அறைகளைத் திறக்கவும் மூடவும் கதவுகளும் இருக்கும். வெற்றிலை போடுபவர்கள் எங்குச் சென்றாலும் முதலில் இந்த வெற்றிலைப்பெட்டி நிறைய வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு முதலியவற்றை எடுத்து வைத்துக் கொண்டு செல்வர். அதுபோன்று மலாயா வந்த நம் தென்னிந்திய தமிழர்கள் தங்களுடன் வெற்றிலைப்பெட்டியை உடன் கொண்டு வந்துள்ளனர் (சாமுவேல், 2018).

இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இந்தியர்கள் அந்நாடுகளில் தங்கள் வாழ்வியல் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் முறையாகப் பின்பற்றியுள்ளனர். மலேசியாவிற்குப் புலம் பெயர்ந்த இந்தியர்களும் தங்கள் வாழ்வியல் பழக்க வழக்கங்களில் முக்கிய இடம் பெற்றிருந்த வெற்றிலை மெல்லுதல், தாம்பூலம் தரித்தல் போன்ற வழக்கங்களை அவ்வாறே மறவாமல் பின்பற்றியுள்ளனர். ஆகவே, மலேசிய இந்தியர்களின் மத்தியில் வெற்றிலை பயன்பாடு எந்த அளவிற்கு வேரூன்றியுள்ளது என்பதைக் கற்றுணர்வதற்கு இந்த ஆய்வுக் கட்டுரை வழிவகுக்கின்றது.

**முந்தைய ஆய்வுகள்**

வெற்றிலை பயன்பாடு குறித்து அதிகமான ஆய்வுகள் நிகழ்த்தப்படவில்லை. ஆயினும், 'வெற்றிலை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள்' (Uses impact of betel leaf on public health) எனும் தலைப்பில் ஃபாரிட் ஊசேன், முஸ்தாப அன்வார் ஆகிய ஆய்வாளர்கள் ஆங்கில மொழி ஆய்வுக் கட்டுரை ஒன்றனை எழுதியுள்ளனர். வெற்றிலையில் பொதிந்துள்ள மருத்துவக் குணங்கள் பற்றி இந்த ஆய்வுக் கட்டுரை நன்கு விளக்கியுள்ளது.

மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு எனும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வுக் கட்டுரைக்குத் திரு. சந்திரமூர்த்தி எழுதிய 'வரலாற்றில் வெற்றிலை' எனும் தமிழ் நூலும் வழிகோலாக விளங்குகின்றது.

## ஆய்வு நெறிமுறை

இந்த ஆய்வுக் கட்டுரை நூலக ஆய்வு மற்றும் கள ஆய்வு ஆகிய இரு அணுகுமுறைகளின் அடிப்படையில் அமைகின்றது. வெற்றிலை குறித்த விவரங்கள் அடங்கிய நூல்களிலிருந்து தரவுகளைச் சேகரிக்க நூலக ஆய்வு கையாளப்பட்டது. இந்த நூலக ஆய்வில் தமிழ், ஆங்கிலம், மலாய் மொழி நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை தரவுகளைச் சேகரிக்க ஊன்றுகோலாக விளங்கின. தொடர்ந்து, வெற்றிலை குறித்த கூடுதல் தகவல் அறிய கள ஆய்வில் 10 நபர்கள் நேர்காணல் செய்யப்பட்டனர். இந்த 10 நபர்களும் மலேசிய குடியுரிமை பெற்ற மலேசிய இந்தியர்கள் ஆவர். இவர்கள் வயது அடிப்படையில் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். முதல் குழுவினர் - ஐந்து நபர்கள் 20 வயது முதல் 40 வயது நிரம்பியவர்கள். இரண்டாம் குழுவினர் - ஐந்து நபர்கள் 41 வயது முதல் 60 வயது கொண்டவர்கள். மேலும், வெற்றிலை குறித்து எந்தப் பாலினத்தவர்கள் அதிகம் அறிந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 10 நபர்களில் ஐந்து பேர் ஆண்கள்; ஐந்து பேர் பெண்கள். மேலும், இந்த ஆய்வின் பிரதான களம் மலேசிய நாடாகும். மலேசியாவில் அதிகமான இந்தியர்கள் வாழ்கின்ற ஜொகூர், மலாக்கா, சிலாங்கூர், பேராக், கெடா ஆகிய ஐந்து மாநிலங்களில் உள்ளவர்கள் மத்தியில் இந்த கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு

மலேசிய இந்தியர்களின் பண்பாட்டுக் கூறுகளில் பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் அனைத்துச் சுகத்துக்கங்களிலும் வெற்றிலையின் பயன்பாடு அளப்பறியது. இத்தகைய முக்கியத்துவம் பெற்றுள்ள வெற்றிலை திருமண விழா, இறை வழிபாடு மற்றும் மருத்துவம் ஆகிய மூன்று பண்பாட்டுக் கூறுகளில் எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதனைப் பின்வருமாறு கண்டறியலாம்:

## திருமண விழாவில் வெற்றிலை

மலேசிய இந்தியர்களின் திருமணச் சடங்குகளில் நிச்சயதார்த்தம் என்பது முதல் படிநிலை ஆகும். இந்த நிச்சயதார்த்தம் என்பது மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் இருவரும் ஒருமித்த மனத்துடன் தமது மகன் அல்லது மகளைத் திருமணம் செய்து வைப்பதாகச் சம்மதம் தெரிவிக்கும் மங்கல விழாவாகும். இவ்விழாவின்போது மணமகனின் பெற்றோரும் மணமகளின் பெற்றோரும் ஒருவருக்கொருவர் தாம்பூலத்தட்டை மாற்றிக் கொள்வது வழக்கமாகும் (பாரதிதாசா, 2021). அந்தத் தாம்பூலத்தட்டில் பாக்கு, தேங்காய், பழம், பூ ஆகிய மங்கலப் பொருள்களுடன் மங்கலத்தின் தலையாய சின்னமாகக் கருதப்படும் வெற்றிலையையும் இடம்பெற்றிருக்கும் (SC Ahuja, 2011).

அடுத்ததாக, திருமண அழைப்பிதழ் அச்சிடப்படாத காலப்பகுதியில் வீட்டுப் பெரியவர்கள் தங்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சுற்றத்தார்கள் வீட்டிற்குச் சென்று வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் கொடுத்து தங்கள் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு அழைப்பது வழக்கமாக இருந்தது. இன்றைய நவீன காலத்தில் கண்கவரும் வகையில் பலதரப்பட்ட வடிவமைப்புகளுடனான திருமண அழைப்பிதழ் கொடுத்துத் திருமணத்திற்கு அழைக்கின்றனர். ஒரு சிலர் சமூக வலைத்தளங்களில் திருமண அழைப்பிதழைப் பதிவேற்றம் செய்து தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால், தாய்மாமன், மாமன் முறையுள்ளவர்களுக்குப் பணம்பாக்கு வைத்துத் திருமணத்திற்கு அழைக்கும் வழக்கத்தை மலேசிய இந்தியர்கள் இன்றளவும் கடைப்பிடிக்கின்றனர். அப்பணம்பாக்குத் தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், குங்குமம் போன்ற மங்கலப் பொருள்களுடன் பணத்தையும் திருமண அழைப்பிதழையும் வைத்து திருமணத்திற்கு அழைப்பர் (தமிழ்ச்செல்வி, 2021).

தொடர்ந்து, திருமணத்திற்கு முதல் இரண்டு நாள்களும் நலங்கு வைத்தல் விழா நடைபெறும். இவ்விழாவில் மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சந்தனம், நல்லெண்ணெய் பூசி நலங்கு வைப்பர். நலங்கு வைக்கும் ஒவ்வொருவருக்கும் மணமகன் அல்லது மணமகள் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் கொடுத்து நன்றி கூறுகின்ற வழக்கத்தை இன்றளவும் அனைத்துத் திருமண இல்லங்களிலும் காணலாம் (குப்புசாமி, 2021). மலேசிய இந்தியர்கள் மட்டுமின்றி உலகவாழ் அனைத்து இந்தியர்களின் திருமணத்திலும் வெற்றிலையின் பயன்பாடு அதிகம் காணப்படுகிறது. வெற்றிலை மங்கலச் சின்னம் மட்டுமன்று; அது மரியாதை உணர்வை வெளிப்படுத்தும் பொருளாகவும் விளங்குகின்றது.

இந்த ஆய்வுக் கட்டுரைக்கான கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் மலேசிய இந்தியர்கள் திருமண விழாவில் வெற்றிலையை பயன்படுத்துகின்றனர் என்று 41 வயது முதல் 60 வயது வரையிலான நபர்கள் 60%-உம் (ஆறு பேர்), 21 வயது முதல் 40 வயது வரையிலான நபர்கள் 40%-உம் (நான்கு பேர்) என்பது உறுதியாகின்றது. மேலும், ஆண் மற்றும் பெண் பாலின அடிப்படையில் பகுத்தாய்தலின் மூலம் மலேசிய இந்தியர்களுள் பெண்களைக் காட்டிலும் ஆண்கள் 80% (எட்டு பேர்) திருமண விழாவில் வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர் என்பது நிரூபனமாகின்றது.

## இறை வழிபாட்டில் வெற்றிலை

பண்டிகை நாள்கள், பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாள்களில் ஆலயம் சென்று இறைவனைத் தொழுவதோடு அர்ச்சனை செய்வது மலேசிய இந்தியர்களின் வழக்கமாகும் (அறிவிந்திரன், 2021). இவ்வாறு அர்ச்சனை செய்ய பயன்படும் பொருள்களில் வெற்றிலை முதலிடம் பெறுகிறது. அர்ச்சனை செய்வோருக்கு இறைவன் பாதங்களில் வைத்து அர்ச்சிக்கப்பட்ட வெற்றிலை, பாக்கு, பழம், பூக்கள், திருநீறு ஆகிய மங்கலப் பொருள்கள் வழங்கப்படுவது வழக்கமாகும்.

மலேசிய இந்தியர்களுள் சிறுபான்மையினர் சனிக்கிழமை, வியாழக்கிழமை மற்றும் நவமி திதியில் ஆஞ்சுநேயருக்கு வெற்றிலை மாலை சாற்றி வழிபடுகின்றனர் (சிவபாக்கியம், 2021). இராவணன் சிறைப்பிடித்து சென்ற சீதையைச் சிறை மீட்க இராமர் இராவணனுடன் போரிட்டார்; வெற்றியும் கண்டார். இந்த வெற்றி செய்தியைச் சீதையிடம் தெரிவிக்கச் சென்ற ஆஞ்சுநேயருக்குச் சீதை வெற்றிலை மாலையைப் பரிசாக அளித்தார் (ஆசிரியர்குழு, 2017). வெற்றிலை வெற்றியின் சின்னம் என்பதனை இப்புராணக் குறிப்புவழி அறிய முடிகிறது. மேலும், ஆஞ்சுநேயருக்கு வெற்றிலை மாலை சாற்றுவதன் மூலம் நாம் நம் வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்காக எடுக்கின்ற அனைத்து முயற்சிகளும் எந்தவொரு தடையுமின்றிக் கைக்கூடும் என்பது மலேசிய இந்தியர்களின் நம்பிக்கையாகும்.

மொத்தத்தில், 41 வயது முதல் 60 வயது வரையிலான நபர்கள் 70%-உம் (ஏழு பேர்), 21 வயது முதல் 40 வயது வரையிலான நபர்கள் 30%-உம் (மூன்று பேர்) இறை வழிபாட்டில் வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர் என்பது கள ஆய்வின் தரவுகளின்வழி புலனாகின்றது. மேலும், ஆண் மற்றும் பெண் பாலின அடிப்படையில் பகுத்தாய்தலின் மூலம் மலேசிய இந்தியர்களுள் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் 70% (ஏழு பேர்) இறை வழிபாட்டில் வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர் என்பது உறுதியாகின்றது.

## மருத்துவத்தில் வெற்றிலை

வெற்றிலை அற்புதமான மருத்துவக் குணங்கள் அடங்கிய இலையாகும். வெற்றிலையோடு வெற்றிலையின் காம்பு, வெற்றிலைக் கொடியின் வேர் போன்றவையும் மருத்துவக் குணம் மிகுந்தது (அலமேலுமங்கை, 2015). மலேசிய இந்தியர்களின் பாரம்பரிய மருத்துவத்தில் வெற்றிலை வெளிப்பூச்சு நிவாரணி மற்றும் உள்பூச்சு நிவாரணி என்று இரு முறைகளில் கையாளப்படுகின்றது.

வெளிப்பூச்சு நிவாரணி என்பது உடலின் புறப்பகுதிகளில் ஏற்படுகின்ற வலி, காயம் போன்றவைக்குப் பயன்படுத்தப்படும் மருந்து. உதாரணத்திற்கு வெற்றிலையைக் கொண்டு பத்துப் போடுதல், வெற்றிலைச் சாற்றைச் சருமங்களில் பூசுதல், உருவுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உடலினுள் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளை உள்பூச்சு

நிவாரணி என்று கூறுவர். உதாரணத்திற்கு, வெற்றிலைச் சாற்றைக் கசாயம் செய்து பருகுதல், கண், காது துவாரங்களில் மருந்தாக ஊற்றுதல் போன்றவையாகும்.

**கண், காது, தலை வலிகளுக்கு நிவாரணி**

மலேசிய இந்தியர்கள் கண், காது வலி ஏற்பட்டால் வெற்றிலைச் சாற்றைக் கண்ணிலும் காதிலும் இட்டுக்கொள்கின்றனர். இவ்வாறு செய்வதால் கண் வலியும் காது வலியும் நீங்கும். மேலும், காதில் ஏற்படும் சீழ் குணமாகும் (லட்சுமி, 2021). வெற்றிலைச் சாற்றில் சுக்கை உரைத்து கண்ணில் இட்டால் விடா இமை துடித்தல் நின்றுவிடும் (சுந்தரமூர்த்தி, 1977). இன்றைய நவீன காலத்தில் தலைவலி ஏற்பட்டால் மேலைநாட்டு வலி மருந்தான 'பெரசிதமோலை' (Paracetamol) நாடி செல்வது வழக்கமாக இருக்கின்றது. ஆயினும், சில மலேசிய இந்தியர்கள் தங்களின் முன்னோர்கள் கையாண்ட, வெற்றிலையையும் கற்பூரவள்ளி இலையையும் அனலில் காட்டி, சாறு பிழிந்து நெற்றியில் பூசும் மருத்துவதைச் செய்து தங்களுக்கு ஏற்படுகின்ற தலை வலியைக் குணப்படுத்திக் கொள்கின்றனர். அதுமட்டுமின்றி, வெற்றிலையின் முனையைக் கிள்ளி நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் ஒட்டினால் உடல் வெப்பத்தால் ஏற்பட்ட தலை வலி நீங்கும் (சுரேந்திரன், 2021).

**கபம், இருமல், வாயு தொல்லைகளுக்கு நிவாரணி**

மலேசிய இந்தியர்கள் காலப்பருவ மாற்றங்களால் ஏற்படுகின்ற கபம், இருமல் போன்ற நோய்களைக் குணப்படுத்த வெற்றிலையில் எண்ணெய் பூசி, அகல் விளக்கில் இளஞ்சூடாக்கி, நெஞ்சுப்பகுதியில் ஒட்டிக்கொள்வர். இவ்வாறு செய்வதால் கபம், இருமல் நீங்கி நலம் பெற இயலும். மண்ணினால் செய்யப்பட்ட அகல்விளக்கில் ஒளிரும் ஒளியின் தன்மை எரிவாயுவழி உண்டாகும் ஒளியில் கிடையாது. ஆகவே, இச்செய்முறை செய்யும்போது அகல்விளக்கைப் பயன்படுத்துவது சிறப்பைத் தரும் (குப்புசாமி, 2021).

தொடர்ந்து, வெற்றிலை, சுக்கு, மிளகு ஆகியவற்றை மென்று விழுங்கி வெந்நீர் குடித்தால் வாயுத்தொல்லை நீங்கி ஆரோக்கியமாக வாழலாம். மேலும், கபம், சீதளம் போன்ற நோய்களுக்குக் காரமுள்ள கருப்பு வெற்றிலையின் (கம்மாறு வெற்றிலை) இரசத்தைப் பருகுகின்றனர் (சூர்யபிரசாந், 2021).

**வாதத்திற்கும் சருமத்திற்கும் நிவாரணி**

மலேசிய இந்தியர்கள் வாதநோயைக் குணப்படுத்த வெற்றிலையை அதிகம் பயன்படுத்துகின்றனர். ஒரு பாத்திரத்தில் சிறிது விளக்கெண்ணெய்யுடன் நீர்விடாமல் அரைத்த வெற்றிலை விழுதைச் சேர்த்து நாள்தோறும் பத்தாகப் போட்டு வந்தால் கீழ்வாதம், விரைவாதம் ஆகிய வாதநோய்கள் குணமாகும். தொடர்ந்து, சருமங்களில் ஏற்படும் சிரங்கு, படைகள் குணமாக அரைக்குவளை தேங்காய் எண்ணெயில் ஐந்து வெற்றிலைகளைப் போட்டுக் கொதிக்கவிட்டு, வெற்றிலை நன்றாகச் சிவந்ததும் எண்ணெயை வடிகட்டி சிரங்கு, படைகளின்மீது பூசுகின்றனர் (லட்சுமி, 2021).

**கட்டிகளுக்கும் வீக்கங்களுக்கும் நிவாரணி**

உடல் அதிக வெப்பமாவதாலும் இதர காரணங்களாலும் உடலில் ஏற்படுகின்ற கட்டிகளைக் குணப்படுத்த இரவில் உறங்குவதற்கு முன் வெற்றிலையில் சிறிதளவு விளக்கெண்ணெய் தடவி, அனலில் காட்டி கட்டிகளின்மீது வைத்து, வெள்ளைத்துணியால் கட்டுகின்றனர். இவ்வாறு செய்வதால் கட்டிகள் உடைந்து சீழ் வெளிவரும். தொடர்ந்து, கால் வீக்கம் குணமாக அழிக்கொடிக்கால் வெற்றிலை, அரிசி, மிளகு, வெந்தயம் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து, நீரில் போட்டு கொதிக்க வைத்து, அதன் ஆவியை நுகர்கின்றனர். பிறகு, அளவோடு அந்நீரில் பசும் வெண்ணெயைக் கலந்து குடிக்கின்றனர் (தமிழ்ச்செல்வி, 2021).

**மகட்பேறு அற்ற பெண்கள், பேருகால பெண்கள், பச்சிளம் குழந்தைகள் ஆகியோருக்கு நிவாரணி**

மலேசிய இந்தியர்கள் வெற்றிலையைக் கொண்டு பெண்களுக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்துகின்றனர். வெற்றிலைக்காம்பு, மிளகு ஆகிய இரண்டையும் அரைத்து, பசுவின் கோமியத்தில் கலந்து, வடிகட்டி, அச்சாற்றைக் கர்ப்பசூலை சிக்கலுடைய பெண்களுக்கு நாள்தோறும் மூன்று வேளை கொடுத்தால் மலடு நீங்கி கர்ப்பசூலை வலுப்பெறும்; மகப்பேறு கிட்டும் (சிவபாக்கியம், 2021).

குழந்தைப்பேருகால வேளையில் அவதியுறும் பெண்களுக்கு ஐந்து அல்லது ஏழு வெற்றிலையைக் கொடுத்து மெல்ல செய்கின்றனர் (தமிழ்ச்செல்வி, 2021). இவ்வாறு செய்வதால் ½ மணி நேரத்தில் சுகப்பிரசவம் ஏற்படும். மேலும், குழந்தை பிரசவித்த தாய்மார்களின் மார்பில் பால் கட்டிக்கொண்டு வீக்கமும் வலியும் ஏற்படுத்தும். இதற்கு வெற்றிலையை அனலில் வாட்டி மார்பில் வைத்து கட்டுகின்றனர். இவ்வாறு செய்வதால் மார்புப்பகுதியில் ஏற்பட்ட வீக்கமும் வலியும் நீங்கி, அதிக தாய்பால் சுரக்கும் (சுவாதி, 2013).

தொடர்ந்து, பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, கபம், சுரம், உப்புசம், மாந்தம் ஆகியவை நீங்க கற்பூர வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர். கற்பூர வெற்றிலையை விளக்கெண்ணெய்யில் வாட்டி, சாறு பிழிந்து, சம அளவு தேன் கலந்த கலவையில் சூடத்தை எரிய வைக்கின்றனர். சூடம் அணைந்த பின் அக்கலவையைக் குழைத்து அளவோடு குழந்தைகளுக்குக் கொடுத்து பிடிதோசம், சுரம், உப்புசம், மாந்தம், சளி, கபம் ஆகிய நோய்களைக் குணப்படுத்துகின்றனர். குழந்தைகள் வாந்தி எடுத்தால் கம்மாறு வெற்றிலையின்மீது சுண்ணாம்பு தடவி, சிறிது மிளகு சேர்த்து, அரை ஆழாக்காகக் காய்ச்சி குழந்தைகளுக்குக் கொடுத்து வாந்தியை நிறுத்துகின்றனர் (சாரதா, 2021).

**வயிற்று வலிக்கு நிவாரணி**

பொதுவாக, வயிற்று வலி, வயிற்று உப்புசம், ஜீரணக்கோளாறுகளுக்கு ஓம நீர் அருந்துவது வழக்கம். மலேசிய இந்தியர்கள் வயிற்றுப்போக்கின்போது ஓமத்தையும் வெற்றிலையும் சம அளவாகச் சேர்த்து இடித்து, சாறு பிழிந்து, அச்சாற்றுடன் தேன் கலந்து பருகுகின்றனர். அதுமட்டுமின்றி, வெற்றிலையில் சிறிது கல் உப்பு வைத்து மடித்து மெல்லுகின்றனர். இதனால், வயிற்றில் ஏற்படுகின்ற குத்து வலி நீங்கும் (அலமேலுமங்கை, 2015).

மலேசிய இந்தியர்கள் ஜீரணக்கோளாறுகள் நீங்கி ஜீரணச்சக்தி அதிகரிப்பதற்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, வால் மிளகு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து மெல்லுகின்றனர். வெற்றிலையில் விளக்கெண்ணெயைத் தடவி, அனலில் வாட்டி உந்தியைச் சுற்றி அடிவயிற்றில் தடவுகின்றனர். இவ்வாறு தடவுவதால் உடல் வெப்பத்தால் உண்டான வயிற்று வலி, வயிற்று உப்புசம் நீங்கும் (மனோகரன், 2021).

**வாந்திக்கு நிவாரணி**

மலேசிய இந்தியர்கள் வாந்தி மற்றும் குமட்டல் வருவதை நிறுத்த கம்மாறு வெற்றிலையுடன் மிளகையும் கறுக்கித் தேனில் கலந்து சாப்பிடுகின்றனர். தொடர்ந்து, வெற்றிலையின் காம்பினை மருந்துண்ட பிறகு வாயிலிட்டு மென்றால் மருந்தின் கசப்புத் தன்மையால் உண்டாகும் குமட்டலைத் தடுத்து வாந்தி வருவதைத் தவிர்க்கலாம் (குப்புசாமி, 2021).

**உடல் பருமனுக்கு நிவாரணி**

இன்றைய காலக்கட்டத்தில் மலேசியர்கள் மத்தியில் உடல் பருமன் சிக்கல் அதிகரித்து வருகிறது. மலேசிய இந்தியர்கள் உடல் எடையைக் குறைப்பதற்கு இரண்டு மாதங்கள் வரை 2 வெற்றிலையில் 5 மிளகு வைத்து வெறும் வயிற்றில் மென்று சாற்றை மட்டும் விழுங்கி வந்தால் உடல் எடை குறையும். மேலும், உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு வெற்றிலை சாற்றுடன் தேன் கலந்து பருகப்படுகின்றது (சாரதா, 2021).

இந்த ஆய்வுக் கட்டுரைக்கான கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் மலேசிய இந்தியர்கள் மருத்துவத்தில் வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர் என்று 41 வயது முதல் 60 வயது

வரையிலான நபர்கள் 80%-உம் (எட்டு பேர்), 21 வயது முதல் 40 வயது வரையிலான நபர்கள் 20%-உம் (இரண்டு பேர்) என்பது உறுதியாகின்றது. மேலும், ஆண் மற்றும் பெண் பாலின அடிப்படையில் பகுத்தாய்தலின் மூலம் மலேசிய இந்தியர்களுள் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் 90% (ஒன்பது பேர்) கைவைத்தியத்தில் வெற்றிலையைப் பயன்படுத்துகின்றனர் என்பது நிரூபனமாகின்றது.

**ஒப்பாய்வு**

மொத்தத்தில், இந்த ஆய்வுக் கட்டுரைக்கான கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் மலேசிய இந்தியர்கள் திருமண விழா, இறை வழிபாடு, சித்த மருத்துவம், கைவைத்தியம் போன்றவற்றிற்கு வெற்றிலையை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்பது தெரிய வருகிறது. மலேசிய இந்தியர்களுள் 41 வயது முதல் 60 வயது வரையிலான நபர்கள் மட்டுமே வெற்றிலை பயன்பாடு குறித்து நன்கு அறிந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. 21 வயது முதல் 40 வயது நிரம்பியவர்களுக்கு வெற்றிலை குறித்த பயன்பாடுகளை நன்கு எடுத்துரைக்க ஆவணம் செய்தல் வேண்டும். இதன்வழி, எதிர்காலச் சந்ததியினருக்கு வெற்றிலை பயன்பாட்டைக் கொண்டு செல்ல முடியும் என்பது திண்ணம்.

அடுத்த நிலையில், மலேசிய இந்தியர்களுள் ஆண்களைக் காட்டிலும் பெண்கள்தாம் வெற்றிலை பயன்பாடு குறித்து நன்கு அறிந்துள்ளனர் என்பது கள ஆய்விலிருந்து பெறப்பட்ட செய்தி ஆகும். குறிப்பாக, வெற்றிலையைக் கொண்டு கைவைத்தியம், சித்த வைத்தியம் செய்வதில் மலேசிய இந்தியப் பெண்கள் கைத்தேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஆகவே, இந்தக் கைவைத்திய முறைகள் அழிந்துவிடாமல் பாதுகாக்க மலேசிய இந்தியர்கள் ஒன்றுபட்டு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

மலேசிய இந்தியர்கள் மத்தியில் திருமண விழா, இறை வழிபாடு, சித்த மருத்துவம், கைவைத்தியம் போன்றவற்றிற்கு வெற்றிலையை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்பது நூலக ஆய்விலிருந்தும் கள ஆய்விலிருந்தும் பெறப்பட்ட தரவுகளின் வழி தெரிய வருகிறது. இருமனங்களையும் திருமணப் பந்தத்தில் இணைத்து வைப்பதற்கு வெற்றிலை ஆதாரமாக விளங்குகின்றது. வெற்றிலையோடு அதன் வேர், காம்பு ஆகிய பகுதிகளும் நோயற்ற வாழ்விற்கு வழிவகுக்கின்றன. மேலும், வெற்றிலையின் மூலம் தயாரிக்கப்படும் வெளிப்பூச்சு மற்றும் உள்பூச்சு நிவாரணிகளுக்குப் பக்க விளைவுகள் ஏதும் கிடையாது. ஆகவே, மருத்துவக் குணம் நிறைந்த வெற்றிலையை அனைத்துத் தரப்பினரும் எந்தவொரு தடையின்றிப் பயன்படுத்துகின்றனர். ஆகவே, வெற்றிலையின் பயன்பாடு மலேசிய இந்தியர்களின் வாழ்வியலோடு ஒன்றியிருப்பது வெள்ளிடைமலையாகும்.

## மேற்கோள் நூல்கள்


Correspondent. (1940, July 18). *War Fund Gift From Chettiar.* Singapore: The Straits Times.

Kumar, S. S. (2009). *Encyclopaedia of Southeast Asia and its Tribes.* New Delhi: Anmol Publications Pvt. Ltd.

SC Ahuja, U. A. (2011). Betel Leaf and Betel Nut in lndia: History and Uses. *Asian Agri-History, 15(1)*, 13-35.

Thuraiappah, D. D. (2015, September 5). *An Introduction to the Malaysian Ceylonese Community and the Malaysian Ceylonese Congress*. Retrieved 8 September, 2020, from Penang Tourism: www.penangstory.net.my/mino-content-paperthuraiappah.html

அலமேலுமங்கை. (2015). தெய்வ வழிபாட்டில் காணலாகும் மருத்துவமும் அறிவியலும். *Trends in Kalis Research, 8*(1), 3-7.

அறிவிந்திரன், இரா. (2021, பிப்ரவரி 26). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

ஆசிரியர்குழு. *ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்துவது ஏன்?* (2017, பிப்ரவரி 13). Retrieved from சமயம் தமிழ்) The Times of India): https://tamil.samayam.com/religion/why-should-we-put-betel-leaves-garland-to hanuman/articleshow/57129449.cms

குப்புசாமி. (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

சந்திரமூர்த்தி, மா. (1977). *வரலாற்றில் வெற்றிலை.* தமிழ்நாடு :தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

சாமிநாதையர், உ.வே . (1956). மணிமேகலை. (ஐந்தாம் பதிப்பு). சென்னை: சாமிநாதையர் நூல் நிலையம்.

சாரதா, ர. (2021, பிப்ரவரி 22). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

*சாலி, ஜே. எம். (2010, செப்டம்பர் 5). பாபாவும் செட்டி மலாக்காவும் சிங்கப்பூரில் நடந்த 'பிரணாக்கான்' விழா.* Retrieved from தினமலர் :https://www.dinamalar.com/supplementary_detail.asp?id=1630&cat=2

சிவபாக்கியம். (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

சுரேந்திரன், ச. (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

சுவாதி. (2013, ஏப்ரல் 24). *வெற்றிலையைப் பற்றி தெரிந்ததும் !தெரியாததும்!* . Retrieved from வலைத்தமிழ் :https://www.valaitamil.com/betle-medicinal-uses_9635.html

சூர்யபிரசாந், சு. (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

தமிழ்ச்செல்வி. (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

பாரதிதாசா, வீ. (2021, பிப்ரவரி 26). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

பிச்சம்மாள், ச. (1900). *மலேசியாவில் நகரத்தார்கள் திருமணங்கள் .(நடைமுறைகளும் மரபுகளும்).* மலேசியா: மலேசிய தனசைவ இளையோர் சங்கம்.

மனோகரன். (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

மாணிக்கவாசகன், ஞா .(1995). சிலப்பதிகாரம் தெளிவுரை. (முதல் பதிப்பு). மலேசியா: உமா பதிப்பகம்.

முத்துகிருஷ்ணன், ம. (2013, ஏப்ரல் 2). *நான் சஞ்சிக்கூலியின் மகன்.* Retrieved 6 செப்டம்பர், 2020, from நான் சஞ்சிக்கூலியின் மகன் :ksmuthukrishnan.blogspot.com/2013/04/blog-post.html?m=1

முத்துகிருஷ்ணன், ம. (2017, ஜூலை 4). *மலாக்கா செட்டிகள் 1.* Retrieved 4 செப்டம்பர், 2020, from மலாக்கா செட்டிகள் 1: ksmuthukrishnan.blogspot.com/2017/07/1.html?m=1

யசோதா. (2021, பிப்ரவரி 25). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

லட்சுமி. (2021, பிப்ரவரி 26). மலேசிய இந்தியர்கள் மத்தியில் வெற்றிலை பயன்பாடு.

விஜயகுமார், க. (2015). தமிழினத்தின் புலம் பெயர்தல். *ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிறப்பு மலர்* (பக் .66-73)). கோலாலம்பூர் :உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலேசியா.

ஜெக்சன். (2014, நவம்பர் 10). *தமிழர்களின் சுவடுகள் தென் கிழக்காசியாவில்- பகுதி 1.* Retrieved 11 செப்டம்பர், 2020, from யாழறிவன் :http://yalarivanjackson.blogspot.com/2014/11/blog-post_10.html?m=1